04.06.2026
OS. No.**216/2021**
**வா.சா.1 –** திரு.கே.ஆர். பிச்சுமணி அய்யங்கார், த/பெ ரெங்கநாதன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

எங்கள் திருக்கோவில் சொத்து பதிவேட்டில் இந்த பரிவர்த்தனையில் கண்ட சொத்து இடம்பெறவில்லை. சொத்துப்பதிவேடு எங்கள் கைவசம் இருக்கிறது, அதை தாக்கல் செய்ய முடியும். வா.சா.ஆ. 2, 4 மற்றும் 5 ஆகியவற்றை நான் படித்துப் பார்த்து தான் தெரிந்த பிறகு என் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். வா.சா.ஆ. 5 உத்தரவில் பத்மாவதி அம்மாளுக்கு பட்டா வழங்க ஆட்சேபனை இல்லை திருக்கோவில் சார்பாக என்று கூறப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ.5 உத்தரவிற்கு பின்னிட்டு அந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் வாதி திருக்கோவில் சார்பாகவும் அல்லது செயல் அலுவலர் சார்பாகவும் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.5 உத்தரவில் பரிவர்த்தனை செய்யப்பட்டது திருக்கோவில் நன்மைக்கு என்று சொல்லப்பட்டு இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 உத்தரவு பிறப்பிக்கும் போது சொத்து பிரதிவாதிகளின் முன்னோர்களின் அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 உத்தரவுக்குப் பிறகு பிரதிவாதிகளின் முன்னோர்கள் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டு அதன் பின்னிட்டு தற்போது பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 23.07.1943-ல் இருந்து இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை வாதி திருக்கோவில் சார்பாகவும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சார்பாகவும் பரிவர்த்தனை செல்லாது என்று எந்த ஒரு வழக்கும் தாக்கல் செய்யவில்லை. அந்த பரிவர்த்தனையானது வாதி திருக்கோவிலின் நன்மைக்காக செய்யப்பட்ட காரணத்தினால் தான் அது தொடர்பாக எந்த வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பரிவர்த்தனை மூலமாக எங்கள் கோவிலுக்கு வழங்கப்பட்ட சர்வே எண்.208/5 ல் கண்ட தற்போதைய சர்வே எண். 208/5A ல் உள்ள 32 செண்ட் வாதி திருக்கோவிலின் அனுபவத்தில்

இருந்து வருகிறது என்று சொன்னால் இல்லை. நான் சொல்வது பொய்யானது என்றும் பரிவர்த்தனை சொத்து வாதி திருக்கோவில் வசம் தான் தற்போது வரை இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. பரிவர்த்தனை மூலமாக திருக்கோவிலுக்கு கிடைத்த சொத்து எங்கள் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றும் அது சரியானது என்பதால் தான் கடந்த 78 வருட காலமாக நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கேட்டிருக்கக்கூடிய பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்தைப் பொறுத்து அடிமனைப்பட்டா பார்வதியம்மாளுக்கு வழங்கப்பட்டதாக தவறாக சொல்கிறேன் என்றும் அது பத்மாவதி அம்மாளுக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 23.07.1943 –ல் கண்ட பரிவர்த்தனை ஆவணத்தை நான் படித்துப் பார்த்தேனா என்றால் அது நடைமுறைக்கு வராத காரணத்தினால் நான் பார்க்கவில்லை. பரிவர்த்தனை பத்திரத்தின் அசல் எங்கள் கைவசம் இல்லை. அதன் நகல் எடுத்து பார்த்தேன் என்றால் தேவையில்லாத காரணத்தினால் எடுத்து பார்க்கவில்லை. பரிவர்த்தனை பத்திரம் நகல் எடுத்து படித்துப் பார்த்து விட்டேன் என்றும் அதில் கண்ட வாசகங்கள் எங்களுக்கு விரோதமாக இருப்பதால் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. அது செல்லக்கூடிய ஆவணம் என்றும் நான் வழக்கிற்காக அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சிறுவயதில் இருந்தேன் வாதி திருக்கோவிலில் ஊழியம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். வாதி திருக்கோவிலுக்கு சொந்தமான சொத்துக்கள் எங்கெல்லாம் இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதிகள் குடியிருந்து வரக்கூடிய விபரம் எனக்கு விபரம் தெரிந்த நாளிலிருந்து தெரியும் என்றால் சரிதான். நாங்கள் கேட்டிருக்கக்கூடிய பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Adobe

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Web copy